# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



3441 1643
567/28

பதிவு அஞ்சல் மூலம்

2181
13 NOV 2020

# நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்
திரு.பா.கணேசன், இ.ஆ.ப.,
நகர் ஊரமைப்பு இயக்குநர்,
807, அண்ணாசாலை,
சென்னை- 2.

பெறுநர்
உதவி இயக்குநர் /
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்.

ந.க.எண்.7591 / 2019 / TCP-7, நாள் .07.11.2020

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம், சென்னை-2 - திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், கன்னிகைப்பேர் ஊராட்சி, கிருஷ்ணாபுரம் தண்டிகை கிராமம் - நில அளவை எண்கள் .356/3B2, 356/3B3, 4A3, 4A4, 357/2B2A, 2B2B, 2B2C, 2B2D, 359/2C2, 2D1, 2D2, 2E, 360/1A1, 2A, 2B, 2C மற்றும் 2D-ல் 8.80ஏக்கர் (35612.03ச.மீ) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப அனுமதி வரைபடம் - ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:
1. மனுதாரர் திரு.A.வரதராஜன், சென்னை என்பவரின் கடிதங்கள் நாள்.28.02.2018, 27.02.2019, 29.05.2020, 13.10.2020 மற்றும் 15.10.2020
2. தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கன்னிகைப்பேர் ஊராட்சி, எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் கடிதம் ந.க.எண்.854/2018/அ6, நாள்.17.04.2018 (ம) 16.09.2020
3. உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.567/2018/திவம2, நாள்.05.04.2019 (ம) 26.08.2019
4. இவ்வலுவலகக் கடிதம் இதே எண் நாள்.28.07.2020,
5. இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.14619/88/பிசிசி, நாள்.27.04.1988
6. இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.40483/90/எல்ஏ1, நாள்.07.11.1992
7. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/எல்ஏ2, நாள்.19.04.2012
8. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.
9. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.2201/2017/சிபி, நாள்.28.09.2017.
10. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020

..2..

11. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள்.04.05.2017.
12. அரசாண எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.04.06.2004
13. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (UD4(3)) துறை, நாள்.23.09.2020
14. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் Roc No.7671/2020/ T(1), நாள்.25.09.2020.

-----

பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 4-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள்.28.07.2020 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டு, பார்வை 2-ல் சுட்டிய கடிதம் நாள்.16.09.2020-ல் சாலை மற்றும் ஒதுக்கீடுகள் உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திர எண்.1945/2020 (ம) திருத்திய தானப்பத்திரம் 2787/2020, நாள்.09.10.2020 ஒப்படைக்கப்பட்டதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ.இ.எண்.42/2020** என எண்ணிடப்பட்டு 4 அசல் வரைபடங்கள் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3) மேலும், பார்வை 5 மற்றும் 6 ஆகியவற்றில் சுட்டியுள்ள இவ்வலுவலக சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) பார்வை 7-ல் சுட்டிய இவ்வலுவலக சுற்றறிக்கையின்படி பொது திறவிடங்கள் மற்றும் சாலைகள் தானப்பத்திரம் மூலம் பதிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைத்துள்ளதன்படி மனைப்பிரிவு உரிமம் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.

5) மனைப்பிரிவு நிபந்தனை எண்.15-ன்படி திறவிடம் மற்றும் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திறந்தவெளி ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும் தானபத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதின்படி தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கன்னிகைப்பேர் ஊராட்சி, எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனவும், மனைப்பிரிவு நிபந்தனை 18(இ), 18(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6) மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள் அனைத்தும் (Quality of Roads) உள்ளாட்சியின் தரத்திற்கேற்ப தார்சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கன்னிகைப்பேர் ஊராட்சி, எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், அவர்களின் சான்று பெற்ற பின்னரே உத்தேச மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்

7) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்: 18(ஈ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

8) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

9) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்:**

1. மனைப்பிரிவில் தார்சாலைகளாக அமைத்தும், சாலைகளுக்கான இடம் மற்றும் அணுகுசாலை விஸ்தரிப்புப்பகுதி, பூங்கா இடம் ஆகியவற்றை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதாக உள்ளாட்சியிடமிருந்து சான்று பெறப்பட்டதன் பேரில் இம்மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கி அனுப்பப்படுகிறது. இதன் பின்னர் மனைப்பிரிவில் தேவையான பாலங்கள், சாக்கடை, வடிகால் துப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதையும், தார் சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளதையும் இட நேராய்வின் மூலம் உறுதி செய்த பின்னரே மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் இம்மனைப்பிரிவுக்கு திட்ட அனுமதி வழங்குவதை உள்ளாட்சிக்குத் தெரிவித்து வரைபடங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

2. பார்வை 8-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்த்துறையில் சர்வே எண்கள் உட்பிரிவுகள் செய்து அதற்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

3. பார்வை 9-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

..4.

4. பார்வை 11-ல் கண்டுள்ள அரசாணையில் குறிப்பிட்டுள்ள விதி எண்.3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
5. Executive Engineer, WRD, Araniyar Basin Division, Chepauk அவர்களின் கடிதம் எண்.DB/JDO.1/F.201/NOC/2019, 23.05.2019 நாளிட்ட Technical opinion கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்
6. உத்தேச மனையிடத்தில் அமைக்கப்பட்டுள்ள "Compound Wall" நீக்கம் செய்யப்பட்டுள்ளதா என்பதனை உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம் அவர்களால் உறுதி செய்து கொள்ள வேண்டும்
7. பார்வை 13 மற்றும் 14-ல் காண் அரசாணை மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநரின் கடிதத்தை தொடர்ந்து பார்வை 12-ல் கண்டுள்ள அரசாணையின்படி உத்தேசத்திற்கான நன்னிலை வரி மற்றும் இதர கட்டணங்களை உதவி இயக்குநர், திருவள்ளூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களால் மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட பின்னரே திட்ட அனுமதி வழங்கப்பட வேண்டும். மேலும் கொடிநாள் நிதியாக நன்னிலைவரி கட்டணத்திற்கு 20% தொகையை "Armed Force Flag Day Fund" என்ற பெயரில் Payable at Chennai என தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் வரைவோலை பெறப்பட்டு இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

<u>இணைப்பு:</u>
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(4 நகல்கள்)

(ஒம்/-) பா.கணேசன்
நகர் ஊரமைப்பு இயக்குநர்

நகல்:
1. தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்,
   கன்னிகைப்பேர் ஊராட்சி,
   எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம். (பத்தி ஒன்று மட்டும்)
2. மனுதாரர்
   திரு.A.வரதராஜன், த/பெ.அர்ஜுனன்,
   நெ1. புது பிள்ளையார் கோயில் தெரு,
   மண்ணூர்பேட்டை,
   சென்னை-50. (பத்தி ஒன்று மட்டும்)
3. இருப்பு கோப்பு (வரைபடம்-1 (ம) நிபந்தனைகள் படிவம்-1)
4. கோப்பு (வரைபடம்-1 (ம) நிபந்தனைகள் படிவம்-1)

/ ஆணைப்படி / அனுப்பப்படுகிறது /

10/11/2020
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்.

1647
3495

தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்புத் துறை, சென்னை

கோப்பு எண்.7591 / 2019 / TCP-7 நாள் :07.11.2020

உதவி இயக்குநர் /
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்.

மனைப்பிரிவு ம.வ./ந.ஊ.இ.எண். 42/2020

---

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1.1) மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ./ந.ஊ.இ.எண்.**42/2020** என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி கட்டிட விதி 2019-ன்படி ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கேற்ப சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரரால் நிர்வாக அதிகாரியால் (Executive Authority) நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் மனுதாரரால் தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

2) அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி, தெரு விளக்கு ஆகிய வசதிகளை நிர்வாக அதிகாரியின் கருத்திற்கொப்ப மனுதாரர் அமைத்துத்தர வேண்டும்.

3) நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாற்ாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பூங்கா அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

4) அங்கீகரிக்கப்பட்ட இம்மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தார் சாலைகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர்/உரிமையாளர் முறையாக அமைக்கப்பட்டு தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கன்னிகைப்பேர் ஊராட்சி, எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், உரிய படிவத்தில் பதிவு செய்து பொதுச்சாலையாக பராமரிக்க தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது

5) மேற்படி சாலைகளை பொதுச் சாலையாக சர்வே கால்ங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு தொகையையும் தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கன்னிகைப்பேர் ஊராட்சி, எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், செலுத்துதல் வேண்டும். இதை நடைமுறைப்படுத்த மனுதாரரிடமிருந்து சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கான உட்பிரிவு கட்டணத் தொகையைப் பெறும் வகையில் பத்திரத்தில் மனுதாரரின் கையொப்பம் பெற வேண்டும்.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

..2..

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது.

5. விரிவு அபிவிருத்தித் திட்டப்பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின் படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒரு பக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக் கூடாது.

6. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு / வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7 மீட்டர் (23 அடி) அகல சாலைக்கு 1.50மீ (5' அடி) 9 மீட்டர் (30அடி) அகலம் மற்றும் 12 மீட்டருக்கு (40 அடிக்கு) அகலம் வரையிலான சாலைகளுக்கு 3 மீட்டரும் (10 அடியும்), 18 மீட்டர் (60 அடி) சாலைக்கு 4.5 மீட்டரும் (15 அடியும்), 24 மீட்டர் (80 அடி) அகலம் மற்றும் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6 மீட்டர் (20அடி) என்ற அளவில் கட்டட வரம்பு விடப்பட வேண்டும். ஊராட்சி கட்டட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர்மட்டத்திலிருந்து 1.8மீ (6அடி) மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளின்படி 2.4மீ (8அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டடமோ, சுவரோ கட்டுதல் கூடாது.

7. மனையின் பக்க எல்லைக்கும் கட்டடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5மீ அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் திறவெளி விடப்பட வேண்டும். 10 மீட்டர் வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத் திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்படவேண்டும்.

8. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3 மற்றும் ஊராட்சி பகுதிக்கு 2 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்கத் திறந்தவெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்து வண்டி நிறுத்தும் கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச் சார்ந்த கட்டடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம். ஆனால், கட்டடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும், மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3.00 மீட்டர் / 3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

9. விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின் படி மனையின் பரப்பில் 50 அல்லது 57 விழுக்காட்டிற்கு மேல் கட்டடம் கட்டப்படக்கூடாது. கட்டடம் கட்டாமல் விடப்படும் திறந்தவெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்புரவாக பராமரித்தல் வேண்டும்.

..3..

 3547 1643

10. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்

11. கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிசை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி பள்ளங்கள், குழிகள், ஏற்படுத்தலோ கூடாது.

12. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

13. மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கன்னிகைப்பேர் ஊராட்சி, எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், அவர்களிடம் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.

14. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

15. பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் உள்ளாட்சி அங்கீகாரம் வழங்கும்முன் தானமாக ஒப்படைக்க வேண்டும். இதனை உள்ளாட்சி அமைப்பு தவறாது கடைப்பிடிக்க வேண்டும். இத்தகைய நிலங்களை மனைப்பிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தாலோ அல்லது விற்பனை செய்தாலோ அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

16. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப்பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

17. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக நிர்வாக அதிகாரி (Executive Authority)யுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும்.

18. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில்நுட்ப ஒப்புதல் (Technical approval) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால், மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்படைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

இ. மனைப்பிரிவு நிலம் 1894-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4(1)-ன்படி அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதா? என்பது பற்றி பரிசீலனை செய்த பின்னரும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதற்காக நிர்வாக அதிகாரி (Executive Authority) மனநிறைவு அடைந்த பின்னரே தான் மனைப்பிரிவுக்கு தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கன்னிகைப்பேர் ஊராட்சி, எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், அவர்கள் ஒப்புதலளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஈ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைக்கதற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

உ. மேலும், மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப் பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதையும் மனநிறைவு அடைந்த பின்னரே தான் மனைப்பிரிவுக்கு தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கன்னிகைப்பேர் ஊராட்சி, எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

19. மனுதாரர் தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கன்னிகைப்பேர் ஊராட்சி, எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், அவர்களிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

20. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

21. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப் பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

22. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனைவாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

23. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

24. EWS மனைகள் பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள், இம்மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது.

..5..

3444
1651



<u>அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவின் ஒதுக்கீடு விபரம்</u>

| விவரம் | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 8.80 ஏக்கர் (அ) 35612.03 ச.மீ | |
| ஒதுக்கிய மனைகள் | - | 157 (EWS மனைகள் உட்பட) | |
| பொது ஒதுக்கீடு<br>மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது. | | | |
| 1.பூங்கா<br>2.புல்வெளி | | 2809.95ச.மீ<br>217.20 ச.மீ | 10.19%<br>0.79% |
| 2. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | - | 8030.23ச.மீ | 22.55% |
| 3. உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு | - | 144.61ச.மீ | 0.52% |
| 4. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது | - | 140.64 ச.மீ | 0.51% |
| 5.EWS மனைகளின் பரப்பு<br><br>மனை எண்கள் | -<br><br>- | 2826.94 ச.மீ<br><br>26-36, 39-52, 55-61, 131-134, மற்றும் 136-148. | 10.25% |

(ஒம்/-) பா.கணேசன்
நகர் ஊரமைப்பு இயக்குநர்

/ ஆணைப்படி / அனுப்பப்படுகிறது /

10/11/2020

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்.

த1.

10/11/20

1655

**கன்னிகைப்பேர் ஊராட்சி, எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறைகள்**
முன்னிலை – திருமதி. உ.காயத்திரி உதயகுமார்

ந.க.எண். 4 /2021/அ6 நாள். 16 .03.2021

பொருள் மனைப்பிரிவு – எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் – கன்னிகைப்பேர் ஊராட்சிக்குட்பட்ட கிருஷ்ணாபுரம் கண்டிகை குக்கிராமத்தில் கன்னிகைப்பேர் வருவாய் கிராம சர்வே எண்.356/3B2, 356/3B3, 356/4A3, 356/4A4, 357/2B2A, 357/2B2B, 357/2B2C, 357/2B2D, 359/2C2, 359/2D1, 359/2D2, 359/2E, 360/1A1, 360/2A, 360/2B, 360/2C, 360/2D ஏக்கர் 8.80 பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு வரைப்படம் மற்றும் இறுதி அனுமதி அளித்து உத்தரவிடல் – சார்ந்து.

பார்வை
1. திரு. A.வரதராஜன் த/பெ.அர்ஜுனன், எண்.1 புது பிள்ளையார் கோயில் தெரு, மண்ணூர் பேட்டை, அம்பத்தூர் சென்னை– 50.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், திருவள்ளூர் அவர்களின் கடித எண்.567/2018/தி–2 நாள்.01.03.2021.
3. தொடர்புடைய ஆவணங்கள்.

---0---

<u>உத்திரவு –</u>

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த கன்னிகைப்பேர் ஊராட்சிக்குட்பட்ட கிருஷ்ணாபுரம் கண்டிகை குக்கிராமத்தில் கன்னிகைப்பேர் வருவாய் கிராம சர்வே எண்.356/3B2, 356/3B3, 356/4A3, 356/4A4, 357/2B2A, 357/2B2B, 357/2B2C, 357/2B2D, 359/2C2, 359/2D1, 359/2D2, 359/2E, 360/1A1, 360/2A, 360/2B, 360/2C, 360/2D ஏக்கர் 8.80 பரப்பளவில் அமைந்துள்ள, குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டு மனைபிரிவு வரைபடம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு பார்வை 2ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது

அதனை தொடர்ந்து கன்னிகைப்பேர் ஊராட்சிக்குட்பட்ட கிருஷ்ணாபுரம் கண்டிகை குக்கிராமத்தில் கன்னிகைப்பேர் வருவாய் கிராம சர்வே எண்.356/3B2, 356/3B3, 356/4A3, 356/4A4, 357/2B2A, 357/2B2B, 357/2B2C, 357/2B2D, 359/2C2, 359/2D1, 359/2D2, 359/2E, 360/1A1, 360/2A, 360/2B, 360/2C, 360/2D ஏக்கர் 8.80 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்தில் குடியிருப்பு மனைபிரிவு இறுதி அனுமதி பின்வரும் நிபந்தனைகளுடன் அளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | Development Charges<br>ஏக்கருக்கு ரூ.5000/– வீதம் 8.80 ஏக்கருக்கு | ரூ. 42000/–<br>ஊராட்சி பொது நிதி கணக்கு எண்.1ல் பலவகை ரசீது எண். 26187, நாள்.12. 03.2021ல் ஊராட்சிக்கு செலுத்தப்பட்டது |
| 2 | கூராய்வு கட்டணம் | ரூ. 1000/–<br>ஊராட்சி பொது நிதி கணக்கு எண்.1ல் பலவகை ரசீது எண். 26187, நாள்.12. 031.2021ல் ஊராட்சிக்கு செலுத்தப்பட்டது |
| 3 | நிலப்பயன் மாற்றக் கட்டணம் | இடத்தின் சந்தை மதிப்பில் 3 % தொகை ரூ.218400/– எழுத்தால் (ரூபாய் இரண்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து நாநூறு மட்டும்) பலவகை ரசீது எண்.26189 நாள்.16.03.2021 ஊராட்சிக்கு செலுத்தப்பட்டது. (ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட 1. பூங்கா, 2.புல்வெளி, 3. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடுக்குகள் 4.ஊராட்சிக்கான ஒதுக்கீடு 5. தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது இவைகளை தவிர/நீங்கலாக. ) |
| 4 | Flag Day (கொடி நாள்) | **Rs.5000/-** DD No.759022,indian Bank, kannigaipair Branch, Dt.11.03.2021 |

## நிபந்தனைகள்

1) 1994 ஊராட்சிகளின் சட்டம் மனைபிரிவு மற்றும் துணை விதிகளுக்குட்பட்டது.
2) மனைபிரிவு வரைப்படத்தில் உள்ளவாறு மனைகள் ஒதுக்கப்படவேண்டும். உள்கட்டமைப்பு மற்றும் வெளிகட்டமைப்பு ஏதும் மாற்றம் செய்யக்கூடாது.
3) மனைகள் மற்றும் தெருக்கள் அங்கிகரிக்கப்பட்டு மவ/நஊஉ இ(திவம) எண். .2021 என எண்ணிடப்பட்ட வரைப்படத்தின்படி எல்லைகள் வரையருக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்து ஊராட்சி கட்டிட விதிகள் 3(5)ன்படி அதிகாரிகளால் விதிகளுக்கேற்ப சரளைகற்களை கொண்டு மனுதாரர் நிர்வாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும்.
4) தேவையான பாலங்கள் சாக்கடை வடிகால், துப்பரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகள் நிர்வாக அதிகாரியின் கருத்திற்கேற்ப மனுதாரர் அமைத்து தரவேண்டும்.
5) இருசாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளில் மூலைகளில் அங்கிகரிக்கப்பட்ட வரைப்படத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (splay) அமைக்கப்பட வேண்டும்.
6) மனைபிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெறவேண்டும்.
7) தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவு வரைப்படத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6 அடிX4 அடி என்ற அளவுக்கு குறையமால் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.
8) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் மனைபிரிவு வரைப்படம் நகல் வழங்கப்பட வேண்டும்.
9) EWS மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது.
10) மனைப்பிரிவு இடம் 1984ம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டபிரிவு 4(1)ன்படி நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலம் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பாக விதிமுறைகள் ஏதேனும் மீறப்பட்டிருந்தால் மனைபிரிவு அனுமதி இரத்து செய்யப்படும்.
11) மனைபிரிவு விதிமுறைகளின்படி கட்டணத்தொகை குறைவாக செலுத்தப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டால் பிற்காலத்தில் அத்தொகையினை மனுதாரரால் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.
12) பார்வை 2ல் காணும் அனுமதி அளிக்கப்பட்ட வரைவு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நிபந்தனைகளை (இணைக்கப்பட்டுள்ளது) அனைத்தும் பொருத்தும்.

U. Kayathri
தலைவர்
கன்னிகைப்பேர் ஊராட்சி
எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்

நகல் – வட்டார வளர்ச்சி அலுவலர்(கிஊ), எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம்.

அனுப்புநர்

க.கோபால கிருஷ்ணன், B.E.,
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்,
எண்.43/397A, இரண்டாம் தளம்,
அன்னை இந்திரா காந்தி சாலை,
இராஜாஜிபுரம் பகுதி - II,
திருவள்ளூர் - 602 001.
தொலைபேசி - 044-29595440.
email-tvlrregion@gmail.com

பெறுநர்

ஊராட்சி மன்ற தலைவர்,
கன்னிகைப்பேர் ஊராட்சி,
எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம்,
திருவள்ளூர் மாவட்டம்.

---

**ந.க.எண்.567/2018/ திருவள்ளூர்-2** **நாள்.01.03.2021.**

ஐயா,

பொருள்: மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் - திருவள்ளூர் மாவட்டம் - ஊத்துக்கோட்டை வட்டம் - எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம்- கன்னிகைப்பேர் ஊராட்சி, கிருஷ்ணாபுரம் கண்டிகை கிராமம் - சர்வே எண்கள்.356/3B2, 3B3, 4A3, 4A4, 357/2B2A, 2B2B, 2B2C, 2B2D, 359/2C2, 2D1, 2D2, 2E, 360/1A1, 2A, 2B, 2C மற்றும் 2D-ல் 8.80 ஏக்கர் (35612.03 ச.மீ) பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு தொழில் நுட்ப அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. மனுதாரர், திரு.A.வரதராஜன், சென்னை அவர்கள் கடிதங்கள், நாள். 28.02.2018, 27.02.2019, 29.05.2020, 13.10.2020 மற்றும் 15.10.2020.
2. தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கன்னிகைப்பேர் ஊராட்சி/ எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் கடிதம் ந.க.எண்.854/2018/அ6, நாள்.17.04.2018 மற்றும் 16.09.2020.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.7591/2019/TCP-7, நாள்.07.11.2020.
4. மனுதாரர் திரு.A.வரதராஜன், சென்னை அவர்களின் கடிதம் நாள்.26.02.2021. (நன்னிலை வரி மற்றும் Armed Force Flag Day Fund வங்கி வரைவோலை கட்டணம்)

*****

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், கன்னிகைப்பேர் ஊராட்சி, கிருஷ்ணாபுரம் கண்டிகை கிராமம், சர்வே எண்கள்.356/3B2, 3B3, 4A3, 356/4A4, 357/2B2A, 2B2B, 2B2C, 2B2D, 359/2C2, 2D1, 2D2, 2E, 360/1A1, 2A, 2B, 2C மற்றும் 2D-ல் 8.80 ஏக்கர் (35612.03 ச.மீ) பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபட ஒப்புதலுக்கு, பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட கடிதங்களுடன் பெறப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு பார்வை 3-ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதத்தில் நிபந்தனைகளுடன் **ம.வ./ந.ஊ.இ.எண்.42/2020** என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு பெறப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

2. பார்வை 4-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் சரக்கு செலுத்தப்பட்ட சேவை நன்னிலை வரி ரூ.47,400(ரூபாய் நாற்பத்தி ஏழாயிரத்து நானூறு மட்டும்) பரிசீலனைக் கட்டணம் (Scrutiny Fees) ரூ.54,000/- (ரூபாய் ஐம்பத்தி நான்காயிரம் மட்டும்) மற்றும் Armed Force Flag Day Fund வங்கி வரைவோலை ரூ.10,000/-(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஆகியன செலுத்தப்பட்டதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

3. மேலும், பார்வை 3-ல் சுட்டிய, நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயலாணை மற்றும் வரைபடங்கள் நிபந்தனைகளுடன் இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்படுகிறது.

1/3/2024

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
திருவள்ளூர் மாவட்டம்.

1.3.2024

**இணைப்பு:**

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் -3Nos.


**நகல் :**

1. Thiru.A.Varadharajan,
No.1, Pudhu Pillaiyar Koil Street,
Mannurpet, Chennai- 600 050.

2. சார்பதிவாளர், ( கன்னிகைப்பேர் ஊராட்சி மன்ற தலைவர், அவர்களின் மூலமாக)
ஆரணி சார்பதிவாளர் அலுவலகம்,
திருவள்ளூர்

3. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மாவட்டம்.
மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

Scanned with CamScanner



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate